[1993 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 164, திரு. கி. தர்மலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். 164—

அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் திருவுருவப் படத்தை வைத்தல்.

*9622 திரு. கி. தருமலிங்கம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் திருவுருவப் படத்தை வைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கி. தருமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நமது புரட்சித் தலைவர் அவர்களின் பெயரால் எம்.ஜி.ஆர். மாவட்டம், எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் என பெயர் சூட்டியுள்ளார்கள். அதே போன்று, நமது 6 கோடி தமிழ் மக்களின் இதயத்திலே குடிகொண்டிருக்கும் இதயதெய்வம் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தை அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இடம்பெறச் செய்ய வேண்டுமென்று அனைத்துப் பொது மக்களும் கோருகிறார்கள். எனவே, இந்தக் கருத்துருவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதற்குப் பிறகாவது பரிசீலித்து, அனைத்துப் பேருந்துகளிலும் அந்தப் படத்தை மாட்டுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரால் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்த உடனேயே நமது ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், அந்தப் பெயரைச் சூட்டி

1993 மார்ச் 30]

இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சி இருக்கிற நேரத்தில் பேருந்துகளில் திருவள்ளுவர் படத்தைத் தவிர எந்தத் தலைவருடைய படத்தையும் பேருந்துகளில் வைக்க வேண்டியதில்லை என்ற கருத்து அன்றைக்கு இருந்த காரணத்தினாலே, அதையே தொடர்ந்து இந்த அரசும் மேற்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் இல்லாவிட்டாலும், நமது எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மட்டுமாவது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். திருவுருவப் படத்தை மாட்டுவதற்கு அமைச்சர் பெருமகனார் அவர்கள் கருணை கூர்ந்து இந்த நேரத்திலேயே படத்தை மாட்டுவதற்கு அறிவிப்பாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் மீது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு உடனடியாக அந்தப் படத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகளில் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 165, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் பரந்தாமன் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

165—

தமிழகத்திலுள்ள காடுகளில் காட்டு வளத்தைப் பெருக்குதல்.

*12813 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் உள்ள காடுகளில் மர விதைகளைத் தூவியும், மரக் கன்றுகளை நட்டும் காட்டு வளத்தைப் பெருக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?